RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s822

OPEN ACCESS

குமரிமாவட்ட நெய்தல் நில சேலாளிகள்

நே. நிஷா நேவிஸ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-629002, தமிழ்நாடு, இந்தியா

Kumari District Weaving land Sealaligal

N. Nisha Navis [a, *]

[a] Department of Tamil, South Travancore Hindu College, Nagercoil–629002, Tamil Nadu, India

* Corresponding Author: prabahar1515@gmail.com

Received: 05-05-2021
Revised: 30-04-2022
Accepted: 08-05-2022
Published: 20-07-2022

Check for updates

ABSTRACT

The Indian coast is an unbroken beach, about 6000 km long. Nature has given Tamil Nadu a long beach which is about 1200 km long, Kanyakumari district coastline is 68 km long from Vatakottai to Kanyakumari on the east coast and Kanyakumari to Neerodi on the west coast. There are 44 fishing villages in Kanyakumari district and the beach is made of sand and rocks. News about the Kumari district has been found in literature since the Tolkappiyar period. The fishermen who live here are referred to in the literature by the words "Puravar, Parathavar & Paravar". Even today these fishermen are called Paravar. The word "Paravar" is derived for puravai, aravai means vast body of water or sea. In the Sangam literature, many commentators refer to Paravar as a fisherman, a merchant or a scafarer. The fisherman living in Kumari district are tribal. This fisherman has traditionally been engaged in fishing and they live and work in harmony with nature. They have acquired knowledge about nature from their ancestors and through their own experience. Through this, they have gained knowledge about the currents of the sea, air, stars and fish species. So, they have a thorough knowledge of the oceans, what type of fish is available at what time and fishing methods. The position of this article is to records such subtle knowledge and to clarify traditional methods of fishing.

Keywords: Fishing, Current of Sea, Sailors, Seasonal Winds, Stars

முன்னுரை

புராதன மக்களின் பூர்வீகத் தொழில் வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் ஆகும். வேட்டையாடுதல் தொழிலுக்கு நேர் இணையான தொன்மையினை உடையது மீன்பிடித்தல் தொழில். மீன் வேட்டம் திமில் வேட்டுவர் என்னும் சங்கச் சொல்லாட்சிகள் இதற்கு சான்றாக அமைகின்றன (Nagarajan, 2017). குமரி மாவட்ட கடற்கரை மக்களின் வாழ்க்கையோடு மீன்பிடித் தொழில் இரண்டறக் கலந்ததாகும். குமரி மாவட்டம் வனவளம், நன்னீர் நிலைகள், கடல்வளம் போன்ற பல்வேறு வளங்களைக் கொண்டதாகும். இவ்வியற்கை வளங்களில் எல்லாம் கடற்கரை வளம் மிகச் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. ஐவகை நிலங்களில் நெய்தல் நிலம் கடலும் கடல்சார்ந்த இடமாக இருப்பதால் இம்மண்ணில் வாழும் மக்கள் தொன்று தொட்டு பாரம்பரியமாக மீன்பிடித்தொழில் செய்து வருகின்றனர். இம்மக்கள் இயற்கையோடு இயைந்து செய்து வருவதால் இயற்கையை நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். இக்கட்டுரையில் குமரி மீனவர்களின் இயற்கை சார்ந்த விஞ்ஞானம் குறித்தும் வானவியல் அறிவு குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது.

சேலாளி

குமரி கடலோர மீனவர்களில் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழில் மட்டுமே செய்து வருகின்றனர். ஆதி காலம் முதலே தொழில் செய்து வருவதால் கடல் குறித்த அறிவு நிரம்பப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். கடலின் நீரோட்டம், காற்று வீசும் தன்மை, வானில் தோன்றும் விண்மீன்கள், பாரு(பாறை), மீன்பாடு ஆகியவைப் பற்றி மிகச் சரியாக கணித்து மீன்பிடிக்க ஏதுவான காலம் குறித்து கூறுகின்றனர். எந்தெந்த நீரோட்டம் காணப்படும் போது என்ன மீன்வகைகள் கிடைக்கும் என்பதை கணித்து கூறுவர். காற்று வீசும் தன்மையைக் கொண்டு கடல் தொழிலுக்கு ஏதுவான சூழ்நிலையை கணிக்கின்றனர். வானில் வெள்ளி தோன்றி மறையும் நேரத்தை வைத்து கடலில் என்னவகை மீன் கிடைக்கும் என்பதை கணித்து கூறுகின்றனர். மீனவர்கள் கடல் தொழிலுக்கு ஏற்றாற் போல் கடல் இருப்பதை “கடல் சேலா கிடக்கு” என்று பேச்சு வழக்கில் கூறுவர். இதையே கடலைக் கணித்துக் கூறுபவரை “சேலாளி” என்று அழைக்கப் பெற்றிருக்கலாம். சேலாளி கூறுவதை வைத்தே, கடலுக்கு எந்த வலையைக் கொண்டு செல்வது என்பதை தீர்மானித்து கடலுக்கு செல்வர். இது அவர்களின் முன்னோர்கள் சொன்ன கணிப்பின் படியும் அனுபவ அறிவின் மூலமும் கணித்து சொல்கின்றனர். பெரும்பாலும் மூத்தோர்களே இவ்வாறு கணித்து கூறுகின்றனர்.

கணியம்

கடல் தொழிலுக்கு செல்லும் மீனவர்கள் கணியம் பார்த்தலை மேற்கொள்கின்றனர். கணியம் என்பதற்கு மிகச் சிறியது மிக நுணுக்கமானது என்று பொருள்படும். கணித்தல் என்னும் செயலின் அடிப்படையில் இச்சொல் ஏற்பட்டிருக்கலாம். கணியம் பார்த்தலை எல்லோராலும் எளிதாகச் செய்ய இயலாது. கடலில் குறித்த ஓர் இடத்தை, அங்கிருந்த படியே கரையிலுள்ள கோயில்,கோபுரம், மலை இவற்றை அடையாளமாகக் கொண்டு கணிப்பது கணியம் எனப்பட்டது.

சென்னை, செங்கற்பட்டு மாவட்ட மீனவர்கள் கணியம் பார்த்தலை“காடுகட்டுதல்” என்று கூறுகிறார் (Muruganantham, 1990). கட்டுதல் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக் காட்டுவதாகும். கடலுக்கு அடியில் உள்ள சேறு, பாறை, மணல், மலை போன்ற இடங்களைக் கண்டறிய கடலில் இருந்து கொண்டே கரையில் உள்ள கோபுரம், கோயில், மசூதி, மலை இவற்றை அடையாளம் கொண்டு கணிக்கின்றனர். இதை அடிப்படையாக வைத்தே முதல் நாள் குறிப்பிட்ட இடத்தில் மீன்பிடிக்க வலையைப் போட்டு விட்டு அடுத்தநாள் அதே இடத்தில் சென்று மீன் வலையை எடுக்கின்றனர். கலங்கரை விளக்கம் இல்லாத காலகட்டத்தில் மீனவர்கள் கண்ணுக்கு தெரிந்த பொருட்களைக் கொண்டு கணியம் பார்த்தலை மேற்கொண்டிருக்கின்றனர். இவ்வளவு பெரிய கடற்பரப்பில் வலையைக் கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு எளிதில்லை. இது அவர்களுடைய அனுபவ அறிவே.

குமரிமாவட்ட மீனவர்கள் கரையில் உள்ள பொத்தமலை, நாளுமலை, கானிட்டு மலை, கடமலை, பாலாமலை, மும்மலை போன்ற மலைகளின் உதவியுடன் கணியம் பார்க்கின்றனர்.

கடலில் இருந்து கலங்கள் கரைதிரும்ப கலங்கரை விளக்கம் இருந்துள்ளது என்பதை சங்க காலத்தில் நீர்ப் பெயற்றுத் துறையிலிருந்த கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

“உரவுநீர் அழுவத்து ஒடு கலங்கரையும்”

செங்கற்களாலும், காரையாலும் கட்டி எழுப்பப்பட்ட உயரிய கலங்கரை விளக்குகள் இருந்தன (Mohan, 2017). கப்பல்களைத் துறைமுகங்களின் திசைநோக்கி அழைக்கும் முறையில் இராக்காலங்களில் பேரொளி விளக்குகள் எரிந்தன என்பதைக் காணலாம். குமரி மாவட்டத்தில் முட்டத்திலும் (1857) கன்னியாகுமரியிலும் (1904) கலங்கரை விளக்கம் காணப்படுகிறது.

மேலும் கடற்பரப்பில் காணப்படும் பறவைகள் வைத்தும் கரையை அறிந்துள்ளனர். எவ்வாறெனில் பறவைகள் உணவுவேண்டிக் கடற்பகுதியில் ஒரு குறிப்பிட்ட தூரம் வரைதான் பறந்து திரியும். கடற்பரப்பின் மேலே மிகத் தொலைதூரமெல்லாம், பறவைகளைக் காண்பது அரிது. இதை

அக்காலத்திலேயே மீனவர்கள் அறிந்திருந்தனர். இதன் மூலம் கடற்கரை அருகாமையில் உள்ளதா? இல்லையா? என்பதை அறிந்து கொண்டனர். இது அவர்களது பறவை இயல் பற்றிய அறிவியல் சிந்தனைக்குச் சான்றாகும்.

நீவாடு

நீவாடு என்பது கடலில் நீரோட்டத்தைக் குறிக்கும் சொல் ஆகும். கடலின் தன்மை எல்லா நாட்களிலும் சீராக இருப்பதில்லை. காற்று வீசும் திசையை நோக்கி கடல்நீர் செல்வதனை நீவாடு என்று மீனவர்கள் அழைக்கின்றனர். கடல் நீரோட்டத்திற்கு தகுந்தபடி வெவ்வேறு பெயர்களைப் பெருகிறது.

மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இருக்கும் நீரோட்டம் "சோன்வாடு" என்றும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய நீரோட்டம் "வான்வாடு"என்றும் அழைக்கின்றனர். அதேபோல் கரையிலிருந்து மேல்நோக்கி வரும் நீரோட்டத்தை "கரவழுவு" என்றும் மேலிருந்து கரையை நோக்கி வரும் நீரோட்டம் "மேவலு" என்றும் அழைக்கின்றனர்.

நீரோட்டம் நடைபெறும் போது நீரின் இயல்பிற்கேற்ப அவை 13 வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவற்றின் சுவை, நிறம் கொண்டு எப்போது என்னென்ன மீன்கள் கிடைக்கும் என்பதை சேலாளிகள் அறிந்திருந்தனர்.

இறால் தண்ணி:கடல்நீர் செந்நிறமாக தோன்றுவது. இந்நீரின் போது இறால் மீன் அதிகமாகக் கிடைக்கும்.

- உப்புத் தண்ணி:கடல்நீர் நீலநிறத்திலும் காவிநிறத்திலும் காணப்படும். இந்நீர் நிலையின்போது எல்லா வகை மீன்களும் கிடைக்கும்.
- ஏறினி: கடல் அலை அதிகமாகக் கரைநோக்கி வருவது, இந்நீர் நிலையின் போது சாவாளை, வாளை போன்ற மீன்கள் கிடைக்கும்.
- கலக்கு: கடல்நீர் கலங்கி காணப்படும். இதுகாப்பி நிறத்தில் காணப்படும். இந்நீர்; நிலையின் போது இறால், குதிப்பு, சாவாளை போன்ற மீன்கள் கிடைக்கும்.
- சுரப்பு: துர்நாற்றம் வீசும், இந்நீர் நிலையின் போது சாளை, நெத்தலி போன்ற மீன்கள் கிடைக்கும்.
- சேறு: இந்நீர் நிலையின் போது கடல் நீரும் களிமண்ணும் கலந்து காணப்படும் இறால், சாளை, சூரை, நெத்தலி, நெய்மீன் போன்ற மீன்கள் கிடைக்கும்.
- தருப்பு: கடல் நீர் மிக குளிர்ச்சியாகக் காணப்படும். இந்நீர் நிலையின் போது வாளை மீன்கள் கிடைக்கும்.
- தெளிவு: கடல் நீர் தெளிந்து காணப்படும் சுத்தமான நீராக இருக்கும். இந்நீர் நிலையின் போது எல்ல வகை மீன்களும் கிடைக்கும்.
- பொளியோட்டம்: ஆற்றுநீர் கடல் நீருடன் சங்கமமாகும் இடத்திலுள்ள நீர்நிலை. இதில் எல்லா வகை மீன்களின் இனப்பெருக்கம் அதிகமாக நடைபெறும்.
- வேற்றம்: கடல் நீரோட்டம் உள்நோக்கி செல்வது.

இவ்வாறு கடலில் காணப்படும் நீவாடு குறித்து சேலாளி கணித்து கூறுவார். இதனடிப்படையில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வர்.

பருவக்காற்று

பண்டை மரபுத் தொடரான 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பது காற்று பற்றி தமிழக மக்கள் பெற்றிருந்த அறிவை நமக்குப் புலப்படுத்தும். தென்றல், வளி, புயல், வாடைக்காற்று, கீழைக்காற்று, மேலைக்காற்று என காற்றைக் குறித்த பல சொற்கள் தமிழிலக்கியத்தில் பழகி வருவதைக் காணலாம். அக்காலக் கப்பல்கள் காற்றின் துணை கொண்டே இயங்கின. இதற்குக் காற்று

எப்போது எத்திசை நோக்கி வீசும் என்று உணர்வது அடிப்படையாகும். இதனைத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர்.

“நளியிரு முந்நீர் நாவாய் சூட்டி

வளிதொழில் ஆண்ட உரவோன் மருக”

என்று புறநானூறு பாடலில் கடலோடிகள் பாராட்டப்பட்டுள்ளனர் (Balasubramanian, 2017). இது தமிழரின் கலம் செலுத்தும் திறனுக்கும் கடல் வணிக மேன்மைக்கும் சான்றாகும். மீனவர்கள் வருடம் முழுவதும் வீசும் காற்றை பதினாறாக வகைப்படுத்தியுள்ளனர். வீசும் காற்றின் திசையை வைத்து அதற்கு பெயரிட்டுளளனர். அவை எந்தெந்த மாதங்களில் வீசும் அப்போது எந்தெந்த மீன்கள் கிடைக்கும் என்பதையும் அறிந்திருந்தனர். கச்சான், கச்சான் கோடை, குன்னுவாடை, கொண்டக்கச்சான், கொண்டல் அல்லது மேல்திசைக்காற்று, சுழிக்காற்று, சோழக் கொண்டல், சோழகன் தென்றல், தென்றல், நேர்க்கொண்டல், நேர்க்கோடை, வடகோடை, வடமேல், வாடைக்கொண்டல், வாடை அல்லது வடதிசைக் காற்று என காற்றை பதினாறு வகையாக பிரிக்கின்றனர்.

விண்மீன்கள் பற்றிய அறிவு

மீனவர்களுக்குக் கரையிலும் கடலிலும் திசையைத் தெரிந்து கொள்வதற்கும் நேரத்தைக் கணக்கிடுவதற்கும் வெள்ளிகள் துணைபுரிகின்றன. இந்த வெள்ளிகள் சில மட்டும் குமரி கடற்கரை ஊர்களில் பெயருடன் அமைகிறது. இலக்கியத்தில் விண்மீன்களின் பெயர் பிற சொற்களுடன் சேர்ந்து வருவதைப் பார்க்கலாம். தொல்காப்பியர் ‘பரணியாற்கொண்டான்’ எனக் குறிப்பிடும் வகையில் பரணி எனும் நாள் நட்சத்திரத்தைக் குறிப்பிடுகின்றது.

“திங்களும் நாளும் முத்து கிளந்தன்ன” (Ilampooranar, 2011).

“வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிய” (Thirugana sambanthar, 2011).

“விரிகதிர் வெள்ளி”

என்ற குறிப்புகளால் சங்க இலக்கியத்திலும் வெள்ளி பற்றிய அறிவு பெற்றிருப்பதை அறியலாம் (Puliyur Kesigan, 2001). இதற்குச் சுக்கிரன், காவியன், பார்க்கவன் என்ற பெயருமுண்டு (Krishnamoorthi, 2005). சங்க காலத்தில் துருவ விண்மீன்களை மையமாக வைத்து கலம் செலுத்தியுள்ளனர். இதற்குக் காரணம் துருவ விண்மீன் வடக்கு நோக்கி இருப்பதனால் தாங்கள் செல்ல வேண்டிய திசையை அதை வைத்தே அறிந்து கொண்டனர் (Krishnamoorthi, 2005).

பன்னிரெண்டு வகையான விண்மீன்கள் துணைகொண்டு, அவ்விண்மீன்கள் தோன்றி மறையும் நேரத்தையும் அவை தோன்றும் திசைகளையும் கணக்கிட்டு, கண்களுக்கெட்டாத வெகுதொலைவில் உள்ள ஆழ்கடலில் மீன்பிடித்து திரும்ப தாங்கள் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கின்ற அளவுக்கு விஞ்ஞான அறிவு பெற்றிருந்தார்கள் மீனவர்கள்.

- ஆறாங்கூட்ட வெள்ளி: ஆறு விண்மீன்களின் கூட்டம். ஆனி மாதம் தோன்றும். கத்தாளமுட்டி, குதிப்பு, குறுமீன், நரிப்பரை, நவரை, முட்டி, போன்ற மீன்கள் கிடைக்கும்.
- எரிஞ்சான் வெள்ளி: பிரகாசமான ஒலியுடன் தோன்றும். ஆடிமாதம் தோன்றும். எல்லாவகை மீன்களும் கிடைக்கும்.
- கடல் வெள்ளி: கடலின் உட்பகுதியில் உதிப்பது. வைகாசி மாதம் தெரியும். இரவு இரண்டரை மணிக்கு தெற்கில் உதிக்கும். குதிப்பு, குறுமீன், முட்டி போன்ற மீன்கள் கிடைக்கும்.
- கப்பல் வெள்ளி: கப்பல் வடிவில் தோன்றுவது கார்த்திகை மாதம் தெரியும். வடமேற்கில் அதிகாலையில் உதிக்கும் கிளத்தி மீன் அதிகமாகக் கிடைக்கும்.
- காட்டு வெள்ளி: மிகத் தூரத்தில் காட்டில் உதிப்பது கார்த்திகை மாதம் தோன்றும். அதிகாலையில் வடக்கில் தோன்றும். கத்தாளை, குதிப்பு, சாவாளை, நவரை போன்ற மீன்கள் கிடைக்கும்.

- குருசு வெள்ளி: நான்கு விண்மீன்கள் சேர்ந்து சிலுவை வடிவில் காட்சி தரும். கார்த்திகை மாதம் உதிக்கும். அதிகாலையில் தெற்கில் தோன்றும் கிளாத்தி, கணவாய் போன்ற மீன்கள் கிடைக்கும்.
- குறிப்பு வெள்ளி: தினந்தோறும் தோன்றும். எல்லாமாதமும் உதிக்கும் அதிகாலையில் மேற்கில் தோன்றும். எல்லா மீன்களும் கிடைக்கும்.

இதைபோல் கூட்டவெள்ளி, சிறிய கடல்வெள்ளி, சின்னமலைமீன் வெள்ளி, சோத்துவெள்ளி அல்லது ஊஞ்சாமத்து வெள்ளி, மலைமீன் போன்ற விண்மீன்கள் குறித்தும் அறிந்திருந்தனர்.

தொழிற்கருவிகள்

மீன்களின் வகைக்கேற்ப அவற்றைப் பிடிப்பதற்கு விதவிதமான உபகரணங்கள் தேவை. குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு வகையான மீனுக்கும் ஒவ்வொரு வகையான வலையைப் பயன்படுத்துகின்றனர்.

1940-ஆம் ஆண்டுவரை மரபு சார்ந்த தொழில் நுட்பங்கள் தான் இருந்தன. கட்டுமரம் வலைகள், துளவை, பன்னா, அடியலம்பு, கம்பா போன்ற பல கருவிகளை பயன்படுத்தினர். இன்றும் நிறைய கிராமங்களில் இவ்வாறே மீன் பிடிக்கின்றனர். மீன்பிடித்தொழில் செய்யும் மீனவர்களை சங்க இலக்கியங்கள் பரதவர் என்ற சொல்லால் அழைக்கின்றனர். இப்பரதவர் பயன்படுத்திய மரக்கலங்கள் குறித்த செய்தி அதிகமாகக் காணப்படுகிறது.

தமிழ்த் துறைமுகங்களில் இடைக்காலத்தில் உரு, சிற்றுரு, சம்பான், சம்போக்கு, பருஞ்சித்திரு, தோணி, படகு, தொங்குகப்பல் போன்ற கலன்கள் பயன்படுத்தப்பட்டமை தெரிய வருவதோடு சம்பான், சம்போக்கு தொங்கு கப்பல் போன்றவை சீனத்துடன் தொடர்பு உள்ளவையாகவும் காணப்படுகிறது (Jeyakumar, 2007).

வங்கம், நாவாய் ஆகியவை பாய்மரங்கள் கொண்ட மிகப்பெரிய மரக் கலங்களாகத் திகழ்ந்துள்ளன. அருமையான பொருள்களைக் கொண்டு வருவதற்காகப் பெரிய ஒலி செய்யும் வங்கங்கள்10 பல திசைகளில் சென்றன என்பதையும் அறியலாம்.

சங்க இலக்கியத்தின் மீன் இனங்கள்

சங்க கால நூல்கள் பலவற்றில் மீன்கள் குறித்த செய்தி காணக்கிடக்கின்றது (Alis, 2017). சங்கப் புலவர்களால் கூறப்பட்ட கடல்வாழ் உயிரினங்களான சுறா, பனைமீன், இறா, ஞெண்டு, சங்கு, தாலி, இப்பி, அயிரை, அயிலை, ஆரை, கெடிறு, யாமை ஆகியவற்றுள் சுறா, அயிரை, அயிலை ஆகியன அவ்வப் பெயர்களாலும் பிற வெவ்வேறு பெயர்களுடனும் இக்காலத்தில் வழங்கப்படுகின்றன. மேலும், சங்க இலக்கியங்களில் சேயிறா, வெண்ணிறா இருவகை இறால் மீன்களின் புறத்தோற்றங்கள் குறித்த செய்திகள் காணக்கிடக்கின்றன (Mohan, 2017).

“மோட்டு மணல் அடைகரைக்

கோட்டு மீன் கொண்டு”

என்ற பாடலின் மூலம் அலைகளால் ஒதுக்கப்பட்டு கடற்கரையில் தங்கும் சுறாமீன் பற்றி கூறுகின்றது (Mohan, 2017). இத்தகைய சுறாமீன்கள் கடலில் வீசப்படுகின்ற வலைகளைத் தம் வலிய கொம்பினால் அறுத்துத் தொல்லை விளைவித்து மீனவ ஆடவரின் வீரத்திற்கு சவாலாக விளங்குகிறது. இவற்றை உளியெறிந்து கொல்வதில் நெய்தல் நில ஆடவர் பெரிதும் விருப்பமுடையவராய் இருந்தனர் (Nagarajan, 2017). காம்பின் இருபுறமும் பற்கள் போன்ற அமைப்புடைய சுறாவை வாள் சுறா என்பர். இக்கொம்பு வீட்டை அழகுபடுத்தும் பொருளாகவும் சண்டையின் போது கருவியாகவும் பயன்படுகிறது.

முடிவுரை

குமரி மாவட்டத்தில் பெரும்பாலும் கடற்கரை கிராமங்களே காணப்படுகின்றது. மீனவர்கள் ஆதிகாலம் முதலே மீன்பிடித் தொழில் செய்து வருவதால் கடல் பற்றியும் வானிலைபற்றியும் நீரோட்டம், பருவக்காற்று பற்றியும் அதிகமாக தெரிந்து வைத்திருக்கின்றனர். பரந்த நீர்பரப்பை தன்னுடைய அனுப அறிவாலும் முன்னோர் சொன்ன இயற்கை அறிவையும் வரும் தலைமுறைகளுக்கும் கற்றுத் தருகின்றனர். இதனால் மரபு சார்ந்த மீன்பிடித் தொழிலை சில கிராமங்களில் இன்றும் பயன்படுத்துகின்றனர். இன்றைய கால கட்டத்தில் நவீன கருவிகள் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். எனினும் நுட்பமான அறிவை சேலாளிகளிடமிருந்து பெற்று கடல்தொழில் மேற்கொள்ளும் போது இன்னும் அதிகமாக இலாபம் பெறும் தொழிலாக அமையும். நம் நாடு மீன் உற்பத்திக்கு ஏற்றநாடு. ஏனெனில் நம் நாடு பூமத்திய ரேகைக்கு அருகாமையில் உள்ளது. இந்த தட்பவெட்ப நிலையில் மீன்கள் நன்கு வளரும். இங்கு பிடிக்கக்கூடிய மீனின் சராசரி அளவு 2.7 மில்லியன் மெட்ரிக் டன் விஞ்ஞானிகள் நம் கடலில் 3.9 மில்லியன் மெட்ரிக்டன் மீன்கள் உள்ளன. மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் அந்நிய செலவாணியில் வருவாயை ஈட்டித் தருகின்றனர் இந்திய மீனவர்கள். இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு இத்தொழில் மேம்பாடு அடைய திட்டங்களைத் தீட்ட வேண்டும். அப்போது உற்பத்தி அதிகமாகும் ஏற்றுமதி அதிகரிக்கும். இதனால் இந்திய பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடையும். மேலும் இச்சமுதாயத்தில் மரபு சார்ந்த பல கலைச்சொற்கள் பயன்படுத்துகின்றனர். இச்சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது இதை மீட்டுருவாக்கம் செய்வதாலும் பதிவு செய்வதாலும் மீனவர்கள் குறித்தும் மீன் பிடித்தொழில் குறித்தும் அதிக தகவல்களைப் பெற முடியும்.

References

Alis, A., (2017) Pathitrupathu, New Century Book House, Chennai, India.

Balasubramanian, V., (2017) Purananuru, New Century Book House, Chennai, India.

Ilampooranar, (2007) Tholkappiam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Jeyakumar, P., (2007) Thamizhaga Thuraimugingal, Anbu Publications, Thanjavur, India.

Krishnamoorthi, S., (2007) Thamizharin Marabuch Selvangal, Ariviyal Thozhilnutppam, Chennai, India.

Mohan, R., (2017) Pathupattu, New Century Book House, Chennai, India.

Muruganantham, S., (1990) Kadarkarai Parathavar Kalai Cholagarathy, Thean Mazhai Pathipagam, Chennai, India.

Nagarajan, V., (2017) Kurunthokai, New Century book house, Chennai, India.

Puliyur Kesigan, (2001) Silapathikaram, Parinilayam, Chennai, India.

Thirugana sambanthar, (2011) Tholkappiam Eluthathigaram, Kathir Pathipagam, Thiruvaiyaru, India.

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License